## யாழ்குடா கரையோரங்களில் புலிகள் அணி நகர்ந்துள்ளதாம்

யாழ் குடா நாட்டின் கரையோரப் பகுதியில் எந்நேரமும் ஸ்ரீலங்காப் படைகள் தாக்குதலை ஆரம்பிக்கலாம் என எதிர்பார்த்து விடுதலைப் புலிகள் தமது அணிகளை இப்பகுதிகளில் உஷார் படுத்தியுள்ளனர் என கொழும்பு ஆங்கில வாரப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. ஸ்ரீலங்காப் படைகள் 1987 ஆம் ஆண்டிற்குப் பின்னர் மேற்கொண்ளும் அநேகமான இராணுவ நடவடிக்கைகள் கடல் வழியாக தரையிறங்கும் ஒபரேஷனாகவே இருந்தது எனச் சுட்டிக்காட்டியுள்ள அப்பத்திரிகை இதே போன்ற கடல்வழி நடவடிக்கையே இம்முறையும் மேற்கொள்ளப்படலாம் என புலிகள் தரப்பில் கருதப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளது.

### கிழக்கில் மழை வெள்ளம்

## காரைதீவு அகதி முகாமில் மூன்று பெண்கள் மரணம்

கிழக்கில் அண்மையில் பெய்த கடும் மழையினால் அப்பகுதியில் உள்ள அகதி முகாம்களில் உள்ள தமிழர்கள் நிலை பரிதாபகரமாக மாறியுள்ளது. காரைதீவு அகதி முகாமிற்குள் வெள்ள நீர் உட்புகுந்ததால் அங்கிருந்த மக்கள் சமையல் செய்யவும் உறங்கவும் முடியாமல் திண்டாடுகின்றனர். மூன்று வயோதிபப் பெண்கள் மழைக் குளிரினால் அகதி முகாமிற்குள்ளேயே மரணமானார்கள் காரைதீவில் உள்ள இரு அகதி முகாம்களிலும் தற்போது 5,325 அகதிகள் உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## சிங்களக் குடியேற்றத்திற்கு சர்வோதய நிதி பயன்பாடு!

வடக்கு கிழக்குப்பகுதியில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்ள சர்வோதய அமைப்பு வெளிநாட்டு நிதி உதவிகளையும் இப்போது பயன்படுத்த ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது புனரமைப்பிற்கு என கிடைத்த 180 மில்லியன் ரூபாவை சர்வோதய தலைவர் ஆரியரட்ன சிங்களக் குடியேற்றங்களை தமிழ் பகுதிகளில் மேற்கொள்ள பயன்படுத்துவதாக செய்திகள் வெளியாகியுள்ளன இதனை எதிர்க்கும் முகமாக சர்வோதய தொண்டர் ஆசிரியர்கள் இன்று உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளனர் இதனிடையே சமூகசேவை தொண்டர் அமைப்பாக இருந்த சர்வோதய 4- பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா 5.00

# முரசொலி

சுடர் 06 ஒளி 35 பிரசோற்பத்தி மார்கழி 17 ( 01 01 1992 ) புதன்

## இ.போ.ச. கட்டிடம் முஸ்லிம்களுக்கா? தியவதன நிலமே உண்ணாவிரதம்

கண்டி தெற்கு இ. போ. ச. கட்டிடத்தை முஸ்லிம் பாடசாலை ஒன்றிற்கு அரசு வழங்கும் யோசனையை எதிர்த்து தாம் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக தலதாமாளிகையின் தியவதன நிலமே நிரஞ்சன் விஜேரத்ன மிரட்டியுள்ளார். கண்டி இ. போ. ச. கட்டிடத்தை முஸ்லிம் பாடசாலையாக மாற்றுவதை எதிர்த்து கண்டி தலதாமாளிகையில் மல்வத்த பீடாதிபதி ஸ்ரீ சியம்ளி மகநாயக்கதேரோ தலைமையில் எதிர்ப்புக் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது இக்கண்டனக் கூட்டத்தில் பேசிய தியவதன நிலமே "இந்த இ. போ. ச டிப்போவில் ஓர் அரச மரமும் தாது கோபுரமும் இருந்தது, எனவே இதை முஸ்லிம்களுக்கு வழங்கமுடியாது. —04 ஆம் பக்கம் பார்க்க

# தமிழகத்திற்கு ராணுவத்தை அனுப்ப கர்நாடக எதிர்க்கட்சிகள் வற்புறுத்து!

## வேலை நிறுத்தத்தைக் கைவிடுமாறும் தமிழ்நாடு முதல்வரிடம் கோரிக்கை

கர்நாடகத்திற்கு எதிரான வேலைநிறுத்தம் ஒன்றை தமிழக அரசு நாளை நடத்தத் திட்டமிட்டுள்ளதால் தமிழ்நாட்டிற்கு உடனடியாக இந்திய இராணுவத்தை மத்திய அரசு அனுப்பவேண்டும் இவ்வாறு கோரிக்கை விடுத்தார் கர்நாடக எதிர்க்கட்சிகளின் தலைவர் டி பி சந்திர கௌடா.

இதேவேளை நாளை தமிழகத்தில் நடைபெறவுள்ள வேலை நிறுத்தத்தை கைவிடுமாறு கர்நாடக அரசு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவைக் கேட்டுள்ளது.

இது குறித்து நேற்று மாலை செய்தியாளர்களிடையே பேசிய கர்நாடக மாநில கல்வி அமைச்சர், கர்நாடகத்திற்கு எதிரான இவ்வேலை நிறுத்தத்தை கைவிடுவதன் மூலம் இரு மாநிலங்களிடையே எழுந்த பதற்ற நிலையை குறைக்க முடியும் என்றார்.

இதனிடையே நாளைய வேலை நிறுத்தத்தை முன்னிட்டு அன்றைய தினத்தை விடுமுறை நாளாக தமிழக அரசு அறிவித்துள்ளது.

## தமிழீழ மீட்புநிதி

06-01-1992 திங்கட்கிழமை தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அளவெட்டி அருணோதயா கல்லூரியில் பி.ப 2 மணிக்கு தமிழீழ மீட்புநிதி திரட்டப்படவுள்ளது.

★ ★

திவசம், காவேரநகர் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வசிப்போரிடமிருந்து 07.01 1992 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 30- மாலை 4 00 மணிவரை தமிழீழ மீட்பு நிதி திரட்ட ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது: மீட்பு நிதி செலுத்த விரும் — 04 ஆம் பக்கம் பார்க்க

## வாசகப் பெருமக்களே!

தரமான செய்திகளையும், தெளிவான கருத்துக்களையும், முறையாகத் தந்திடும் உங்கள் முரசொலி

உங்கள் சிந்தனைக்கு உகந்ததாய் வெளிவர உங்கள் கருத்தறிய உங்களை நாம் நாடுகின்றோம்! முரசொலியில் வெளிவரும் செய்திகள், கட்டுரைகள், விமர்சனங்கள், என்பன பற்றிய உங்கள் கருத்துக்களையும், தேவைகளையும், ரசனைகளையும் அறிந்து அவற்றிற்கமைய முரசொலியை உங்கள் கைகளில் சமர்ப்பிக்க விரும்புகின்றோம்,

இதன்படி ஒவ்வொரு மாத முடிவிலும் அம்மாத முரசொலி பற்றிய அபிப்பிராயங்களை எழுதி அடுத்த மாதம் 5 ஆம் திகதிக்கு முன்பதாக எமது விநியோக முகவரிடம் கையளிக்குமாறு வாசகர்களை வேண்டிக் கொள்கின்றோம்,

தரமானதென நாம் கணிக்கும் முதலாவது கருத்துக் கணிப்பிற்கு ஒரு மாதத்திற்கும்

இரண்டாவது கருத்துக் கணிப்பிற்கு இருபது நாள்களுக்கும்,

மூன்றாவது கருத்துக் கணிப்பிற்கு பத்து நாள்களுக்கும்

### வெற்றிலைக்கேணியில் 3 படையினர் காயம்

## கொல்லப்பட்ட கடற்படையினர் தொகை 9 ஆக அதிகரிப்பு

## வெற்றிலைக் கேணி படையினர் துப்பாக்கிச் சூடு

## கொல்லப்பட்ட கடற்படையினர் தொகை 9 ஆக அதிகரிப்பு

...த ஞாயிறன்று யாழ் நீரேரியில் கடற்புலி... மூழ்கடிக்கப்பட்ட ...படைப் படகிலிருந்து ...ல்லப்பட்ட கடற்படை...ரின் தொகை 9 ஆக ...கரித்துள்ளது.

...ம்பவத்தில் காயமடைந்து ...பத்திரியில் அனுமதிக்கப் ... மூன்று கடற்படையி... இருவர் மரணமாகி ...ளதாக ஏஜென்ஸி செய்தி தெரிவித்தன.

தேவேளை வெற்றிலைக் கேணி கடற்கரைப்பகுதியில் கண்ணிவெடிகளை அகற்றிக் கொண்டிருந்த இராணுவத்தினர் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் 3 படையினர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## வெற்றிலைக் கேணி படையினர் துப்பாக்கிச் சூடு

வெற்றிலைக்கேணி இராணுவமுகாமில் இருந்தும் அனையிறவு இராணுவ முகாமில் இருந்தும் நேற்று முன்தினம் பகல் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் ஊரியான் பகுதியில் படகுகள் மீது பயணம் செய்து கொண்டிருந்த பயணிகள் பதற்றம் அடைந்ததாக தெரிவிக்கப்படுகின்றது ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதையடுத்து படகுச் சேவை சிறிது நேரம் தடைப்பட்டதாகவும்பின்னர் தொட

— 04 ஆம் பக்கம் பார்க்க

## மூழ்கிய கடற்படைபடகிலிருந்து மேலும் ஒரு தொகுதி ஆயுதங்கள்

யாழ் கடல் நீரேரியில் மூழ்கடிக்கப்பட்ட கடற்படை படகிலிருந்து மேலும் ஒரு தொகுதி ஆயுதங்கள் கடற்புலிகளால் மீட்கப்பட்டுள்ளது.

கடலில் தேடுதல் நடத்திய புலிகள் மற்றுமோர் தொகுதி ஆயுதங்களான- ரி-81 துப்பாக்கிகள்-2, ரி-56-1, ரி-81 ரவைக்கூடுகள்-10, ரி-56 ரவை கூடுகள்-4, 7 62 ஐ எம் ரவைகள்-410, ஜே. ஆர் குண்டுகள் -6 என்பனவற்றை மீட்டெடுத்துள்ளனர்.

## புத்தாண்டு வாழ்த்து

இருள் சூழ்ந்துள்ள இவ்வேளையில்
எழுச்சியும் மகிழ்ச்சியும் துலங்க...
எங்குமே இன்பம் சூழ...

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாசகர்கள்,
வாடிக்கையாளர்கள், விநியோக முகவர்கள்,
வர்த்தகப் பெருமக்கள் அனைவருக்கும்

## முரசொலி

புத்தாண்டு வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்கிறது.

## புதிய நாணயம்

ஜனாதிபதி பிரேமதாஸவின் உருவம் பொறிக்கப்பட்ட புதிய ஒரு ரூபா நாணயம் நாளை வெளியிடப்படவுள்ளது.

இரண்டாவது கருத்துக் கணிப்பிற்கு இருபது நாள்களுக்கும்,

மூன்றாவது கருத்துக் கணிப்பிற்கு பத்து நாள்களுக்கும் இலவசமாக முரசொலி வழங்கப்படும்,

நிர்வாகம்

## கைது செய்யப்பட்ட ஜே.வி.பி. நபர் மர்மமான முறையில் கொலை

ஜே. வி, பியின் முக்கிய நபரான ஜயரட்னா என்பவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு மர்மமான சூழ்நிலையில் கொல்லப்பட்டுள்ளார்

புனரமைக்கப்பட்ட ஜே வி. பியின் இரண்டாவது முக்கியஸ்தரான இவர் சென்ற வருடம் ஆனிமாதம் பொலிஸ் பாதுகாப்பில் இருந்து தப்பி

— 04 ஆம் பக்கம் பார்க்க

## மலேஷிய தமிழர்களும் புலிகளுக்கு உதவுகின்றனராம்

மலேஷியாவில் வாழும் தமிழர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மிகுந்த நெருக்கம் இருந்ததை தாம் கண்டுபிடித்துள்ளதாக மலேஷியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப்புலிகளுக்கு மலே

— 04 ஆம் பக்கம் பார்க்க

## வீரச்சாவு

திருமலை சல்லிமுந்தல் பகுதியில் இராணுவத்துடனான, மோதலில் காயமடைந்த நிகன் (இ மோகன் மூதூர்) வீரச்சாவு எய்தினார் மட்டக்களப்பில் படையினர் பதுங்கியிருந்து தாக்கியதில் விடுதலைப்புலிகளின் மூமு

— 04 ஆம் பக்கம் பார்க்க

## எதிர்க்கட்சிகளின் கூச்சல் ரூபவாஹினி ஒளிபரப்பியது!

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தில் பாராளுமன்றத்தின் இரண்டாவது அமர்வின் போது ஜனாதிபதி பிரேமதாஸ உரையாற்றியதை எதிர்க்கட்சியினர் கூச்சலிட்டு குழப்பியவீடியோ படத்தினை நேற்று ரூபவாஹினி ஒளிபரப்பியது.

ஜனாதிபதியின் மூன்றாண்டு கால ஆட்சி தொடர்பாக

— 04 ஆம் பக்கம் பார்க்க

# மரணப் பணிக்கொடை இன்று வழங்கப்படும்!

கமத்தொழில் காப்புறுதிச் சபையின் விவசாய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் உறுப்புரிமை பெற்ற இரண்டு விவசாயிகளுக்கு மரணப் பணிக்கொடை வழங்கப்படவுள்ளது.

உரும்பிராய் வடக்கு பி. தியாகராசா என்பவருக்கு 11,877 ரூபா 92 சதமும், கோப்பாய் வடக்கு அ. தனபால சுப்பிரமணியம் என்ற விவசாயிக்கு 10,859 ரூபாவும் அவரவர்களின் உரித்தாளிகளிடம் இன்று முதலாம் திகதி புதன்கிழமை கமத்தொழில் காப்புறுதிச்சபையில் வைத்து உதவிப் பணிப்பாளர் சி. ஸ்ரீ சுந்தரராசாவினால் வழங்கப்படவுள்ளது.

இதுவரை சுமார் 14 விவசாயிகளுக்கு மரணப் பணிக்கொடையும் ஒரு விவசாயிக்கு இயலாமைக்கான பணிக்கொடையும் வழங்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (04)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1992-01-10 வரை விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

தற்காலிக செய்முறைக் காட்டுநர்:

உடலமைப்பியல் / உடற்றொழிலியல் / சமுதாய மருத்துவம் / மருந்தியல் / சட்டமருத்துவம் / நோயியல் / அறுவை மருத்துவம் / மருத்துவம் / குழந்தை மருத்துவம் / மனநோய் மருத்துவம்.

**சம்பள அளவுத் திட்டம்:**

தற்காலிக செய்முறைக் காட்டுநர்: 3,250/- ரூபா மாதமொன்றுக்கு. (பரீட்சைப் பெறுபேறுகளுக்காகக் காத்திருப்போர் ரூபா 3,000/- மாதாந்தச் சம்பளத்தில் வைக்கப்படுவர்.)

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பப்படிவங்களை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தாபனக் கிளையின் உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களைப் பெற விரும்புவோர் 23 × 10 ச. மீ. அளவுடைய, சுய முகவரியிட்டு, முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது

# 'இந்தியாவுக்குள்ளேயே தமிழர்கள் அகதிகளாவதா?

# கொடுமையிலும் கொடுமை'

## கண்கலங்குகிறார் ம. பொ. சி.

'இந்தியாவுக்குள்ளேயே தமிழர்கள் அகதிகளா? கொடுமையிலும் கொடுமை! இந்நிலை கண்டு நான் கண் கலங்குகின்றேன்.'

இவ்வாறு தமிழர்கள் கர்நாடகத்தில் தாக்கப்பட்டது குறித்து தமிழகத்தின் முது பெரும் அறிஞர்களில் ஒருவரான சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞான கிராமணியார் (ம. பொ. சி) தெரிவித்துள்ளார்.

'கன்னடத்தில் வாழும் இறுபான்மைத் தமிழர்களுக்கு எதிராக ஒரு பெரும் கலகமே நடந்து கொண்டிருக்கிறது. ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட பெண்களும், குழந்தைகளும் கூட்டம் கூட்டமாக உயிருக்குப் பயந்து நாள்தோறும் வெளியேறிக் கொண்டிருக்கின்றனர் - இந்தச் செய்தியை அறியும்போது மனம் வேதனையடைகிறது' எனவும் ம. பொ. சி. தெரிவித்திருக்கிறார்.

இது இவ்வாறிருக்க -

கர்நாடகாவில் தமிழர்களுக்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள போராட்டம் வெறுமனே காவிரி நீர் விவகாரம் பற்றியது என்று கருதுவதற்கில்லை. கர்நாடகத்தையும் தமிழகத்தையும் நிரந்தர பகைமை உள்ள மாநிலங்களாக்கும் தீய சக்திகளின் சதியாகவும் இருக்கக் கூடும் என தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி கூறியுள்ளார்.

# வீடியோப்படக் கட்டுப்பாடு; மீண்டும் அறிவுறுத்தல்

வீடியோப் படங்கள் திரையிடுவதற்கான கட்டுப்பாடு பற்றி விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம் பின்வரும் அறிவுறுத்தலை விடுத்துள்ளது.

விடுதலைப்புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகம் முன்னர் விதித்த கட்டுப்பாடுகளுக்கு முரணாக நாட்டின் பல்வேறு இடங்களில் மீண்டும் வீடியோ படங்களை சிலர் வருமானம் கருதி திரையிட்டு வருவதாக எமது கவனத்திற்குப் பலர் கொண்டு வந்துள்ளனர். எனவே இதுபற்றிய கட்டுப்பாட்டு அறிவித்தலை மீண்டும் தருகின்றோம்.

1. வருமானம் கருதி எவரும் வீடியோப் படங்களை திரையிடுவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

2. முன் அனுமதியின்றி பலர் கூடி சிறிய அரங்கம் போன்று தினசரி வீடியோப் படங்களைத் திரையிட்டுப் பார்ப்பது தவிர்க்கப்பட வேண்டும்.

3. ஒரு வீட்டிற்குட் வசதியையாக வருமானம் கருதி வீடியோ படம் திரையிடுவது குற்றமாகக் கருதப்படும்.

4 நாட்டின் எந்த மூலையிலாவது முன் அனுமதியின்றி வருமானம் கருதியோ, சிறிய அரங்க நிலையில் பொது இடங்களிலோ தனியார் வீடுகளிலோ வீடியோப் படம் திரையிடுவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

5 போராட்ட உணர்வை மழுங்கடிக்கும் ஆபாசப் படங்களையும், மனிதவின் மலிவான உணர்வுகளைத் தீனிபோடும் மசாலாப் படங்களையும் திரையிடுவது சமூக விரோதச் செயலாகவும் தண்டனைக்குரிய குற்றமாகவும் கருதப்படும்.

மேலே குறிப்பிடப்பட்ட தவிர்க்கப்படக் கூடியவற்றை மீறி வீடியோப் படங்களை திரையிடுவோர் தண்டனைக்குரிய குற்றம் இழைத்ததாகக் கருதப்படுவர். மேற்குறிப்பிட்ட வகையில் எவராவது படங்களைத் திரையிட்டால் உங்கள் பகுதி விடுதலைப்புலிகள் பொறுப்பாளரிடமோ அல்லது உங்கள் பகுதி கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளரிடமோ தொடர்பு கொண்டு அறியத்தருமாறு மக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

## பிரதேச செயலக திறப்புவிழா

அரசாங்கத்தின் நிர்வாகப் பரவலாக்கல் திட்டத்தின் கீழ் வடக்கு கிழக்கு மாகாண சபையின் நல்லூர்ப் பிரதேசத்துக்காக அமைக்கப்படவுள்ள பிரதேசச் செயலகம் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ் மாவட்ட அரசாங்க அதிபரும், மாவட்ட ஆணையாளருமாகிய கா. மாணிக்கவாசகரினால் திறந்து வைக்கப்படவுள்ளது. (21)

## ஒரு ரூபா நாணயம்

ஒரு ரூபா சிறப்பு நாணயமொன்றை இலங்கை மத்திய வங்கி விரைவில் வெளியிடவுள்ளது.

ஜனாதிபதி பிரேமதாஸா பதவியேற்ற மூன்றாவது ஆண்டை நினைவு கூரும் வகையிலேயே இச்சிறப்பு நாணயம் வெளியிடப்படவுள்ளது.

# காங்கேசன்லங்காசிமெந்து நிறுவன

# 44 ஊழியர்கள் வேலை நீக்கம்!

காங்கேசன்துறை லங்கா சிமெந்து நிறுவனத்தின் 44 ஊழியர்களுக்கு கொழும்பிலுள்ள தலைமை அலுவலகத்தின் பணிப்புரையின் பேரில் வேலை நீக்க அறிவித்தல் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மூன்று தடவைகள் தமது மாதச் சம்பளத்தை பெற்றுக் கொள்ளாத ஊழியர்களுக்கே வேலை நீக்க அறிவித்தல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மேற்படி நிறுவன உயரதிகாரி ஒருவர் இதுபற்றி முரசொலிக்கு நேற்றுத் தொலைபேசியில் தெரிவித்தார்.

இதேவேளை சுன்னாகத்திலுள்ள நிறுவனத்தின் தற்காலிக அலுவலகத்தில் மாதாந்த சம்பளம் வழங்கப்பட்டு வருவதாகவும், இவற்றை உடனுக்குடன் தாமதமின்றி ஊழியர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜூன் மாதம் தொடக்கம் ஊழியர்களின் சம்பளத்தில் 25 வீதமே கொடுப்பனவாக வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (13)

## தொழில்புரியும் பெண்களுக்கு 'எய்ட்ஸ்' கல்விப்போதனை

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் தொழில் புரியும் பெண்களுக்கு எய்ட்ஸ் பற்றிய கல்வியை மேற்கொள்ள சுகாதார அமைச்சு திட்டம் ஒன்று வகுத்துள்ளது.

முதற்கட்டமாகத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களுக்கு கருத்தரங்குகளை நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது.

நாட்டில் 49 பேருக்கு எய்ட்ஸ் நோய் பீடித்துள்ளதாகவும், சுமார் 800 பேருக்கு மேல் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (06)

## வல்வையில் பொது நூலகம்

வல்வெட்டித்துறை நகரசபைப் பகுதி மக்களின் நன்மைகருதி வல்வெட்டித்துறையில் பொதுசன நூலகம் ஒன்று வெகு விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளதாக யாழ் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தெரிவித்தார்.

இப் பொதுசன நூலகம் தனியார் கட்டிடமொன்றிலேயே முதலில் இயங்கும். (11)

## 50 வெற்றிடங்களுக்கு 1500 பேர் போட்டி!

யாழ் போதனா வைத்திய சாலையில் 50 சுகாதார சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் புதிதாக நியமிக்கப்படவுள்ளனர்.

இவர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்முகப் பரீட்சை இம்மாதம் நடைபெறவுள்ளது.

சுமார் 1500 பேர் இப்பதவியைப் பெற விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளனர். (07)

## ஐ.தே.க. உறுப்பினரைச் சுட்டவர் மற்றுமோர் நபரால் கொலை

தென்மாகாண சபை ஐ.தே.க. விட்டார் என அம்பலாந்

# தமிழகத்திலுள்ள கன்னடத்தவர் வெளியேறத் தொடங்குகின்றனர்!

கர்நாடகத்தில் தமிழர்கள் தாக்குதலுக்கு உள்ளான கர்நாடகத்தவர்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

சில எதிர்விளைவுச் சம்பவங்கள், அச்சுறுத்தல்கள்

களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது நிறுவனத்தின் தலைவர் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

ஒரு பதவிக்கு மேல் விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

1991 ஒக்டோபரில் எம்.பி.பி.எஸ். இறுதித் தேர்வுக்குத் தோற்றிப் பெறுபேறுகளுக்காகக் காத்திருக்கும் 1983 ஆம் ஆண்டுத் தொகுதியைச் சேர்ந்த யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மருத்துவ மாணவர்கள் மேற்குறித்த பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்
கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1991-12-30

01001

## மற்றுமோர் நபரால் கொலை

தென்மாகாண சபை ஐ.தே.க. உறுப்பினர் நெல்சன் மெண்டிஸ் என்பவர் இனந்தெரியாதவர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

எனினும் அவரைச் சுட்ட துப்பாக்கி நபரை மற்றுமோர் இனந்தெரியாத ஒருவர் உடனடியாகவே சுட்டுக் கொன்றுவிட்டு தப்பிச்சென்று விட்டார் என அம்பலாங்கொட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## முடமான படையினருக்கு இசை கேட்க ரேடியோக்கள்!

வடக்குக் கிழக்கில் நிகழும் யுத்தத்தில் கைகால்களை இழந்த ஆயுதப்படை மற்றும் பொலிசாருக்கென 40 சக்தி ரேடியோக்கள் அரசாங்கத்தினால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

இவற்றை நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்ச்சியில் திருமதி ஹேமா பிரேமதாச வழங்கினார். 16

## 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பெறுபேறுகள் வெளியாகின!

கடைசியாக நடைபெற்ற ஆண்டு ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் நேற்றுக் கொழும்பில் வெளியிடப்பட்டன.

இப்பரீட்சையில் திறமையாகச் சித்தியடைந்த 7200 மாணவர்களுக்கு உதவிகள் வழங்கப்படவுள்ளன.

1991 ஆம் ஆண்டுக்கான இந்த ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை யாழ் மாவட்டத்தில் நடாத்தப்படவில்லை என்பதுவும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## இவ்வருட நிவாரணத்துக்கு 67 கோடி 10லட்சம் ரூபா!

1985 க்கும் 1991 க்கும் இடைப்பட்ட காலத்தில் வன்செயலினால் பாதிக்கப்பட்டோருக்கு இவ்வருடம் நிவாரண உதவி வழங்கவென 67 கோடி 10 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கி இந்த பணத்தை வழங்கியுள்ளது.

கர்நாடகத்தில் தமிழர்கள் தாக்குதலுக்கு உள்ளானதைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் வசித்துவந்த சுமார் 1000 கர்நாடகத்தவர்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

இவர்கள் கர்நாடக மாநிலத்திற்கு இடம்பெயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ்நாடு கடலூர் தாலுகாவிலிருந்து 300 கன்னடக் குடும்பங்கள் தப்பியோடி தமிழகப் பொலிசாரிடம் பாதுகாப்புக் கோரியுள்ளனர்.

சில எதிர்விளைவுச் சம்பவங்கள், அச்சுறுத்தல்கள் காரணமாகவே இவர்கள் வெளியேறுவதாகத் தெரிய வருகின்றது.

இதேவேளை கர்நாடகத்திலிருந்து வெளியேறிய தமிழர்களின் ஒரு தொகையினர் கேரளத்தில் அடைக்கலம் கோரியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## கர்நாடக வன்செயலை எதிர்த்து தமிழகத்தில் வேலை நிறுத்தம்

கர்நாடகத்தில் தமிழர்கள் மீது ஏவி விடப்பட்ட வன்செயல்களுக்குக் கண்டனம் தெரிவிக்குமுகமாக ஜனவரி 2 ஆம், 3 ஆம் திகதிகளில் தமிழ்நாட்டில் வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாக பி.பி.சி. அறிவித்துள்ளது.

வன்செயலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதிலும் தமிழர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதிலும் பிரதமர் நரசிம்மராவ் மெத்தனமாக நடந்து கொண்டதாகத் தமிழக முதல்வர் குற்றம்சாட்டியிருப்பதாகவும் கர்நாடகத்தில் அமைதி ஏற்பட முதல்வர் பங்காரப்பாவைப் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று கர்நாடக முன்னாள் முதல்வர் படேல் கோரியிருப்பதாகவும் பி. பி. சி. தெரிவித்தது.

# தகுதி பெற்ற 65 தமிழ் மாணவர்க்கு

# பல்கலைக் கழக அனுமதி நிராகரிப்பு!

1990-91-ம் கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக தெரிவுக்குரிய அனுமதி பெற்றிருந்தும் விண்ணப்பங்கள் தாமதமாகக் கிடைத்ததாகக் கூறி வட, கிழக்கைச்சேர்ந்த 65 க்கும் மேற்பட்ட தமிழ் மாணவர்களுக்கான வாய்ப்பு இல்லாமல் செய்யப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது பற்றி பிரஸ்தாப மாணவர்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவிடம் நேரடியாக முறையிட்டு விண்ணப்பங்கள் தாமதமாகக் கிடைத்தமைக்கு அதற்கு இந்த நிலவும் போக்குவரத்துச் சிரமமே காரணமெனவும் சுட்டிக்காட்டினர்.

எனினும் அவர்களது கோரிக்கை நிராகரிக்கப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (16)

## புலிகளின் கொள்கைப்பற்று; மதிக்கிறேன் என்கிறார் காமினி

"விடுதலைப் புலிகளின் 'ஈழம்' கோரிக்கையை நான் ஏற்றுக் கொள்ளாத போதிலும் அவர்கள் ஈழம்கோரிக்கை மீது கொண்டுள்ள உறுதியான கொள்கைப் பிடிப்பை நான் பெரிதாக மதிக்கின்றேன்" என்று ஐ.தே.க. அதிருப்தியாளர் குழுவின் முக்கியஸ்தர்களில் ஒருவரும் முன்னாள் அமைச்சருமான காமினி திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

'வீரகேசரி' வார வெளியீட்டுக்கு அளித்துள்ள பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். (16)

## சைவ நூல் நிலையம் புனரமைப்பு

இலங்கைச் சைவ மன்றத்தின் சைவ நூல் நிலையம் புனரமைக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

இச் சைவ நூல் நிலையத்திற்கு நூல்களை அன்பளிப்புச்செய்ய பல நலன் விரும்பிகள் முன்வந்துள்ளனர். ஏற்கனவே பல நலன் விரும்பிகள் நூல்களை அன்பளிப்புச்செய்துள்ளனர். மேலும் பல நூல்களை இலங்கைச் சைவ மன்றம் கொள்வனவு செய்யவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (11)

## கலாசாலையிலிருந்து வெளியேறிய 20 ஆசிரியர்க்கு நியமனம்!

ஆசிரிய பயிற்சிக்கலாசாலையிலிருந்து பயிற்சியைப்பெற்று வெளியேறியுள்ள 20 ஆசிரியர்கள் தை மாதம் 6 ஆம் திகதி பாடசாலைகள் ஆரம்பிக்கும் போது வடமராட்சி கிழக்குப் பாடசாலைகளில் நியமிக்கப்படவுள்ளனர்.

ஆசிரிய பயிற்சிக் கல்லூரியிலிருந்து பயிற்சி பெற்று வெளியேறிய ஒன்பது விஞ்ஞான ஆசிரியர்களும் ஆறு கணித ஆசிரியர்களும் இரு ஆங்கில ஆசிரியர்களும் மூன்று றோமன் கத்தோலிக்க ஆசிரியர்களும் வடமராட்சி கிழக்குப் பாடசாலைகளில் கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளனர். (11)

# வடமராட்சி கிழக்கு ஆசிரியர்களின் இடமாற்றங்கள் ரத்து!

### பாடசாலைகளும் 6ஆம் திகதி ஆரம்பம்

வெற்றிலைக்கேணி இராணுவ நடவடிக்கை காரணமாக இயங்காதிருந்த உடுத்துறை கொத்தணிப் பாடசாலைகள் 1992 ஆம் ஆண்டு ஜனவரி ஆறாம் திகதி முதலாம் தவணைக்காகப் பாடசாலைகள் தொடங்கும் போது ஆரம்பிக்கப்படவிருப்பதாக வடமராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்நடவடிக்கை காரணமாக உடுத்துறை கொத்தணியில் இருந்து வேறு பாடசாலைகளுக்குத் தற்காலிகமாக இடமாற்றப்பட்டிருந்த அனைத்து ஆசிரியர்களினதும் இடமாற்றங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளது எனவும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மருதங்கேணி இ.த.க. பாடசாலையில் உடுத்துறை ம. வித்தியாலயமும், செம்பியன்பற்று அ.த.க. வில் வெற்றிலைக்கேணி பரமேஸ்வராவும், செம்பியன்பற்று றோ.க. வில் ஆளியவளை சி.சி. பாடசாலையும், மாமுனை அ.த.க. வில் வெற்றிலைக்கேணி றோ.க. வும், தாழையடி றோ.க. வில் கட்டைக்காடு றோ.க. வும் காலை மாலை வேளைகளில் இயங்கவுள்ளன. (11, 24)

## பாடசாலைகள் நாளை ஆரம்பம்

## கல்வி அமைச்சு நேற்று அறிவிப்பு

அரசாங்கப் பாடசாலைகள் அனைத்தும் முதலாம் தவணைக்காக நாளை இரண்டாம்திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகும் எனக் கல்வி அமைச்சு நேற்று அறிவித்தது.

எனினும் க.பொ.த.சாதாரணதரப்பரீட்சை விடைத்தாள்களைபுள்ளியிடும் வேலைகள்மேற்கொள்ளப்படும் பாடசாலைகள் 6ஆம் திகதியே முதலாம் தவணைக்காக மீண்டும் திறக்கப்படும்.

முதலாம் தவணை விடுமுறைக்காக பாடசாலைகள் ஏப்ரல் 3 ஆம் திகதி மூடப்படும்.

## ரூபவாஹினி தமிழ்ப்பிரிவின் பணிப்பாளராக விஸ்வநாதன்

ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் நிகழ்ச்சிப் பிரிவின் பிரதிப் பணிப்பாளராகக் கடமையாற்றிய திரு. சில்வஸ்டர் எம். பாலசுப்பிரமணியம் தமது பதவியிலிருந்து அண்மையில் ஓய்வு பெற்றுள்ளார்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் 1961 ஆம் ஆண்டு பகுதிநேர அறிவிப்பாளராக ... பிரிவின் தற்காலிக உதவிப் பணிப்பாளராக திரு. எஸ். விஸ்வநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். (10)

## முரசுமோட்டையில் தீ விபத்து! லொறியும் எண்ணெயும் நாசம்

கொழும்பிலிருந்து மண்ணெண்ணெய் ஏற்றி வந்த ...யில் இவ் விபத்து நிகழ்ந்தது. (35)

## மருத்துவபீட மாணவருக்கு ஒன்பது மாத சிறைத் தண்டனை

இரண்டாம் வருட பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர் ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்கு விசாரணையையடுத்து ஒன்பது மாதச் சிறைத் தண்டனையை ஐந்து வருட ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையாக விதித்துள்ளது.

இந்த மாணவர் ஜே.வி.பிக்கு ஆதரவாக அரசுக்கு எதிராக சுட்டுரைகள் எழுதியதாகவும் ஜே.வி.பி இயக்கத்தினர் பற்றி பொலிசாருக்குத் தகவல் தரவில்லையென்றும் குற்றம் சாட்டப்பட்டிருந்தார்.

## பனைத்தொழிற் பயிற்சி நெறி இன்று வைபவரீதியாக ஆரம்பம்

பனை—தென்னை வள அபிவிருத்தி ஒன்றியத்தினால் மேற்கொள்ளப்படும் பனைத் தொழிற் பயிற்சி நெறி இன்று முற்பகல் 11.00 மணிக்கு யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜாவினால் ஆரம்பித்து வைக்கப்படுகின்றது.

இவ் வைபவத்தில் விடுதலைப்புலிகள்மக்கள் முன்னணிப் பிரமுகர்களும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றவுள்ளனர்.

இதனையொட்டி இச் சிறப்புக் கட்டுரையை மேற்படி ஒன்றியம் வெளியிட்டுள்ளது.

மூன்று மாதகால பனைத் தொழிற் பயிற்சி நெறி கடந்த ஆண்டில் (1991) முற்பகுதியில் தமிழீழத்தில் பனை தென்னை வள ஒன்றியத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த முதற்பயிற்சி மூலம் தற்பொழுது பதினெட்டுப் பயிற்சி பெற்ற பனந்தொழில் வல்லுநர்கள் ஈடாநாட்டிலுள்ள தெங்குப் பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களில் தமது பயிற்சிச் செயன்முறைகளைப் பெற்றுக்கொண்டிருக்கின்றனர். வடமராட்சி கிழக்கு புரம் பனைப்பண்ணையில் அமைந்துள்ள பனந்தொழிற் பயிற்சி நிலையத்தில் ஒரு பயிற்சிக் காலத்தில் ஐம்பது பனந்தொழில் வல்லுநர்களை உருவாக்கக் கூடிய வசதிகளும், வாய்ப்புகளும் ஏற்படுத்தப்பட்டமை தெரிந்ததே. இருந்தும் முதலாவது பயிற்சித்திட்டத்தில் பதினெட்டு இளைஞர்கள் மட்டுமே பயிற்சி பெற முன்வந்தனர். இவர்களில் ஐந்து பேர் மிகத் தேர்ச்சி பெற்ற பனந்தொழில் வல்லுநர்கள் 'ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டத்தின்' கீழ் இந்தியாவில் சிறப்புப் பயிற்சி பெறுவதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(05.12.91) வியாழக்கிழமை நடைபெற்ற இரண்டாவது பயிற்சித்திட்டத்திற்கான பயிற்சியாளர்களில், நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட ஐம்பது பேரில் இருபத்தைந்துக்கும் அதிகமானோர் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் சிறப்புத்தேர்ச்சி பெற்றவர்கள். இவர்களில் பலர் இதுவரைகாலமும் பனந்தொழில் தொடர்பு அற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பனந்தொழில் எமது மண்ணின் 'தேசியத் தொழில்' என்பதை மக்கள் ஏற்றுச் செயற்படுகின்றனர் என்பதற்கு மேற்படி நிகழ்வுகள் சான்றாகின்றன. ஒன்றியம் இப் பயிற்சியை சுய தொழில் வேலை வாய்ப்புப் பயிற்சியாக அளிப்பதோடு பயிற்சிக் காலத்தில் பயிற்சியாளர்களுக்கு மாதம் ஒன்றிற்கு ரூபா ஆயிரம் பயிற்சிக்கால ஊக்குவிப்புக் கொடுப்பனவாக வழங்குவதோடு இலவச தங்குமிட வசதி, உணவு, பிற வசதிகளையும் வழங்கி வருகின்றன.

நேர்முகத் தெரிவின் பின்னரும் பல இளைஞர்கள் தமக்குச் சந்தர்ப்பம் தருமாறு ஒன்றியத்தில் நேரில் வந்து கோருகின்றனர். இதற்கமைய இத்த மூன்று மாத கால பனந்தொழிற் பயிற்சி நிலையங்களை ஈடாநாட்டிலுமுளும் வெளியிலும் விஸ்தரிப்பதற்கான செயற்திட்டங்களில் ஒன்றியம் ஈடுபட்டுள்ளது.

தமிழீழத்தின் பிரதான இயற்கை வளங்களான பனை, தென்னை வளங்களை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் செயற்படும் பனை, தென்னை வள அபிவிருத்தி ஒன்றியம் இப் பயிற்சி மூலம் பதநீர் உற்பத்தி அதிகரிப்பதையும், பனம் சீனி உற்பத்தி அபிவிருத்தியையும் முன்னெடுத்துச் செயற்படுகின்றது. இன்றைய போர்க்காலச் சூழ்நிலையில் எமது மக்கள் தமது இருப்பிடங்கள் தொழில் வாய்ப்புக்களை இழந்தும் அன்றாட அத்தியாவசிய பொருள்களைப் பெற முடியாமலும் இன்னலுறுகின்றனர். இந்த நிலையிலும் எமது மண்ணில் நூற்றுக்கு 90 வீதம் தொடர்ந்து நடைபெறும் தொழிலாகப் பனை சார்ந்த உற்பத்தித் தொழிலே அமைகிறது.

எம் மண்ணின் சீனித்தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய வளமும் அதற்கான தொழிற்திறன்— மனித ஆற்றலும் உரிய முறையில் பயன்படுத்தாது தேக்கமடைந்துள்ளன. எமது சீனித் தேவையைப் பூர்த்தி செய்யப் பனம் சீனி உற்பத்தி, பதநீர் உற்பத்திச் செயற்பாடுகளை முன்னெடுத்து நிற்கும் ஒன்றியம்

னார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் 1961 ஆம் ஆண்டு பகுதிநேர அறிவிப்பாளராகச் சேர்ந்த இவர் பின் தமிழ்ப்பிரிவின் தயாரிப்பாளரானார். பின்னர் ரூபவாஹினியில் செய்திப்பிரிவின் தயாரிப்பாளராகச் சேர்ந்தார். இதனைத் தொடர்ந்து ரூபவாஹினியில் செய்திப் பிரிவின் பிரதிப் பணிப்பாளராகப் பதவி உயர்வும் பெற்றார்.

திரு சில்வஸ்டர் பாலசுப்பிரமணியம் ஓய்வு பெற்றதனால் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் நிகழ்ச்சிப்

## லொறியும் எண்ணெயும் நாசம்

கொழும்பிலிருந்து மண்ணெண்ணெய் ஏற்றி வந்த தனியாருக்குச் சொந்தமான லொறியொன்று முரசுமோட்டைப் பகுதியில் தீப்பற்றி முற்றாகச் சாம்பலானது.

தீயை அணைக்க எடுக்கப்பட்ட முயற்சி தோல்வியடைந்து விட்டது. லொறியும், லொறியிலிருந்த 48 பரல் மண்ணெண்ணெய்யும் முற்றாக எரிந்துவிட்டன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு முரசுமோட்டைப் பகுதியில் இவ் விபத்து நிகழ்ந்தது. (35)

வல் தரவில்லையென்றும் குற்றம் சாட்டியிருந்தார்.

முறையில் பயன்படுத்தாது தேக்கமடைந்துள்ளன. எமது சீனித் தேவையைப் பூர்த்தி செய்யப் பனஞ் சீனி உற்பத்தி, பதநீர் உற்பத்திச் செயற்பாடுகளை முன்னெடுத்து நிற்கும் ஒன்றியம் படித்து வேலைவாய்ப்பற்றிருக்கும் இளைஞர்களுக்கு பனந்தொழிற் பயிற்சி அளிப்பதுடன் நிற்காது பாடசாலை மாணவர்களுக்குப் படிக்கும் பொழுதே தொழில் செய்யும் வகையில் பனந்தொழிற் பயிற்சிகளை அளிப்பதும் அவர்களின் வருமானத்தைப் பெருக்குவதுமான வழிவகைகளை எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த உள்ளது

## தமிழீழ மீட்புநிதி திரட்டல்

04-01-1992 சனிக்கிழமை யாழ்ப்பாணம் உதவி அதிபர் பிரிவிலும், நல்லூர் உதவி அதிபர் பிரிவிலும் தமிழீழ மீட்புநிதி திரட்டப்படவுள்ளது.

I. யாழ்ப்பாணம் உதவி அ. அ. பிரிவு:

1. சன்மார்க்க வித்தியாசாலை யாழ்ப்பாணம் காலை 9.00— மு.ப 11.00 மணி.

2. சென் பற்றிக்ஸ் கல்லூரி யாழ்ப்பாணம், மு.ப 11.30— பி.ப 1.00 மணி.

II. நல்லூர் உதவி அ.அ. பிரிவு:

1. இந்து மகளிர் கல்லூரி கந்தர்மடம். பி.ப 3.00— மாலை 5.00 மணி.

05-01-1992 ஞாயிற்றுக்கிழமை கரவெட்டி உதவி அதிபர் பிரிவிலும், பருத்தித்துறை உதவி அதிபர் பிரிவிலும் தமிழீழ மீட்பு நிதி திரட்டப்படவுள்ளது.

I. கரவெட்டி உதவி அதிபர் பிரிவு:

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் காலை 8.00 — ந.ப 12.00 மணி

II பருத்தித்துறை உதவி அ. அ. பிரிவு:

பருத்தித்துறை வடஇந்து மகளிர் கல்லூரி பி.ப 1.30— மாலை 5.00 மணி.

### சிகிச்சைகள்

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் மீண்டும் மனநோய் வைத்திய சிகிச்சைப் பிரிவும் மார்பு நோய் வைத்திய சிகிச்சைப்பிரிவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 11

## தெரிவுக் குழுவுக்கு ஆளுங்கட்சியும் ஆலோசனை!

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக ஆராயும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியும் தனது ஆலோசனைகளைத் தெரிவிக்கவுள்ளது.

இது தொடர்பாக ஆளும் கட்சி சமர்ப்பிக்கவுள்ள யோசனைக்கு கருத்துக்களைச் சமர்ப்பிக்குமாறு ஐ. தே. க. உறுப்பினர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

தனிப்பட்ட யோசனைகளைக்கூறி மக்களைக் குழப்பாமல் நடந்து கொள்ள வேண்டுமெனவும் ஐ. தே. க. உறுப்பினர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

## வீடமைப்புக் கடனை மீளளிக்க கால அவகாசம்

யாழ் வீடமைப்புத் திணைக்களத்தில் வீடமைப்புக் கடன் பெற்றவர்கள் தமது கடனை மீளச் செலுத்தித் தீர்ப்பதற்காக அறிவிக்கப்பட்ட சலுகைத்திட்டம் போதிய கால அவகாசமற்றிருப்பதால் யாழ் மாவட்டத்தில் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

நீண்டகாலமாக வீடமைப்புக்கடன்கள் அறவிடப்படாமலிருப்பதால் கடன் அறவிடலைத் துரிதப்படுத்தும் முகமாக முற்றாகச் செலுத்தப்படும் கடன் பணத்திற்குப் பத்து வீத கழிவும், அபராதத் தொகையிலிருந்து விலக்களித்தும் விசேட சலுகை வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் யாழ் மாவட்டத்தில் வீடமைப்புக்கடன் பெற்றவர்களுக்குச் சலுகைத் திட்டம் அறிவிக்கப்பட்ட அவகாசம் குறுகிய காலமே எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (14)

# பௌத்த குருமார் புத்தர் வழியை கடைப்பிடித்தால் நாட்டிற்கு நன்மை!

"பௌத்த மதத் தலைவர்களும், பௌத்த குருமார்களும் புத்தர் போதித்த சமாதானம், அன்பு, என்ற வழிகளில் ஆழ்ந்த பற்றுக்கொண்டு அவற்றை கடைப்பிடித்தால் அது நாட்டுக்கு நன்மைகளை ஏற்படுத்தும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை"

இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உபதலைவர் எஸ். ராஜு தெரிவித்துள்ளார்.

"ஒருசில அரசியல் வாதிகளாலும் மதவாதிகளினதும் பொறுப்பற்ற பேச்சுகளினாலும், போக்கினாலும் தான் சிறுபான்மை மக்கள் மத்தியில் பெரும்பான்மை இனத்தவர்கள் பற்றி அச்சமும் சந்தேகமும் எழுந்தன

புதிய சமாதான முயற்சிகளை விடுதலைப் புலிகளுடன் அமைச்சர் தொண்டமான் ஆரம்பித்துள்ளார். தமக்குரிய அனுபவ முதிர்ச்சியைக் கொண்டு அவர் செயற்படுகிறார். அவரது கையைப் பலப்படுத்துவதற்கு பதிலாக முயற்சிக்கு குந்தகம் ஏற்படுத்துவது நாட்டை படுகுழியில் தள்ளுவது போன்ற செயலாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். 8

## பொருள்கள் வரவினால் விலைகள் பெருமளவு வீழ்ச்சி

யாழ் குடாவில் பெருமளவில் சவர்க்காரங்கள் வருவதனையடுத்து நேற்றும் யாழ், திருநெல்வேலி, சுன்னாகம் சந்தைகளில் சோடி சவர்க்காரம் 25 ரூபாவாக விற்கப்பட்டது. நேற்று திருநெல்வேலி சந்தையில் 16 ரூபாவிற்கு மேல் சவர்க்காரம் விற்கப்படவில்லை.

மண்ணெண்ணையின் விலையும் வீழ்ச்சியடைந்து வருகிறது. 1 லீற்றர் ம. எண்ணை திருநெல்வேலியில் 52 ரூபாவாகவும் சுன்னாகத்தில் ஒரு லீற்றர் 50 ரூபாவாகவும் விற்கப்பட்டது.

நேற்றும் மண்ணெண்ணைய், சவர்க்காரங்கள், நூளம்புத் திரி, சீனி, மாவு இனிப்பு, பிஸ்கட்வகைகள் பெருமளவில் யாழ் குடாவுக்குள் தினமும் வந்து கொண்டிருப்பதாக வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன.

கிளிநொச்சி, முல்லைமாவட்டங்களிலிருந்தும் நெல், பயறு, உழுந்து, கௌபி உட்பட பலதானியப் பொருள்கள் யாழ் குடாவை நோக்கி பெருமளவில் வந்து கொண்டிருப்பதால் இவற்றின் விலைகள் குறையுமென எதிர் பார்க்கப் படுகிறது. 07

## காவிரி நீர்ப்பிரச்சினையில் வன்முறையைத் தூண்டாதீர்

**-மத்திய அரசு**

காவிரி நீர்ப் பிரச்சினை தொடர்பாகவன்முறைகளுக்கு இடமளிக்காமல் மக்களின் இயல்பு வாழ்க்கை நிலை ஏற்படுவதற்கு தமிழ்நாடு கர்நாடக அரசுகளும் மக்களும் ஒத்துழைக்க வேண்டும் என்று நேற்று டில்லியில் கூடிய தேசிய ஒருமைப்பாட்டுச் சபை கோரிக்கை விடுத்திருக்கிறது.

பிரதமர் நரசிம்மராவ் தலைமையில் கூடிய இச்சபை நடைபெற்ற கலவரங்களுக்கும் பாதிப்புகளுக்கும் தனது கவலையையும் தெரிவித்துள்ளது.

இதேவேளை நேற்று முன்தினம் கூடிய காங்கிரஸ கட்சிக் கூட்டத்தில், காங்கிரஸ கட்சிஉறு பினரைக் கொண்ட ஒரு குழுவை இருமாநிலங்களுக்கு அனுப்பி நேரில் மதிப்பீடு செய்வதென்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## அன்னை தேரேசா நிலை கவலைக்கிடம்

மெக்ஸிகோ விஜயத்தின் போது நோய்வாய்ப்பட்ட அன்னை தெரேசா அமெரிக்க கலிபோர்னிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரின் நிலை கவலை தருவதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

## மக்கள் அஞ்சலிக்கு

வீரச்சாவு எய்திய ரீகனின் புகழுடல் இன்று காலை 8 மணிமுதல் 9 மணி வரை கொக்குவில் கேணியடி திருமலை மாவட்ட தொடர்பகத்தில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு பின்னர் அரியாலை செல்லக்கிளி அம்மான் வீடமைப்புத்திட்ட சனசமூக நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்காகவும் வைக்கப்படும் புகழுடல் கோப்பாய் மாவீரர் இல்லத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

## பாவனையில் இல்லாத அம்புலன்ஸ்

பிரிட்டிஷ் அரசினால் மட்டக்களப்பு சுகாதார திணைக்களத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட இரு புது அம்புலன்ஸ் நீண்ட காலமாகப் பாவிக்கப்படாது இருக்கின்றன.

இது பற்றித் தெரியவருவதாவது மேற்படி அம்புலன்ஸ பற்றிய ஆவணங்கள் முறையாக அமையாத காரணத்தினால அவை பதியப்படவில்லை யெனவும் பதியப்படாதவாகனம் பாவிக்கப்படாதெனப் பொலிஸார் எச்சரித்துள்ளதாகவும் தெரிகிறது.

இவ் விடயம் புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சின் திட்டப்பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

**வீரச்சாவு...**

நேர ஆதரவாளரான கௌரி (மாமாங்கம்) சயனைட அருந்தி வீரச்சாவு அடைந்தார்.

**வெற்றிலைக்—**

ர்ந்து நடைபெற்று வருவதாகவும் தெரியவருகின்றது

இதேவேளை நேற்றுக்காலையில வெற்றிலைக் கேணிப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும் கேட்டதாக தெரியவருகின்றது. 24

**மலேஷியா—**

ஷிய வாழ் தமிழர்கள் உதவி அளிப்பதை எவ்வாறு தடுப்பது என்பது குறித்து தாம் ஆராய்ந்து வருவதாக மலேஷிய டி ஐ பி தெரிவித்துள்

**...கது...**

யோடியவராவர். இவர் சென்ற கிழமை மாகோ பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

இவ் விடயம் எதிர்க்கட்சி அரசியல்வாதி ஒருவரினால் பாதுகாப்புச் செயலர் சிறில் ரணதுங்காவின்கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இவருக்கு எதிராக தடுப்பாணை பிறப்பிக்காத காரணத்தினால் இவர் நீதிமன்றத்தில் ஆஜர்பண்ணப்பட்டிருக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை 2000க்கும் அதிகமான சந்தேக நபர்களுக்கெதிராக போதிய சாட்சியங்கள் இல்லாமையால் சட்டமா அதிபர் வழக்குத் தாக்கல்

## சோவியத் யூதர்கள் இஸ்ரேலுக்கு அழைக்கப்படுவர்

சிதைந்து போன சோவியத் யூனியனில் வாழும் யூதர்களை விமான மூலம் இஸ்ரேலுக்குக் கொண்டுவருவதற்கு இஸ்ரேல் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

சோவியத்தில் நிலவும் தற்போதைய சூழ் நிலையில் உள்நாட்டு யுத்தமோ சதிமுயற்சியோ நிகழ்ந்தால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களிலிருந்து இஸ்ரேலியரைப் பாதுகாக்கக் கருதியே இந்த நடவடிக்கை எடுக்கப்படப்போவதாகத் தெரியவருகிறது

நாளொன்றுக்கு 50,000 —— 1, 00000 யூதர்களை

## ஹாட்லி நூலகம் புனரமைப்பு

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி நூலகத்தை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளைக் கல்லூரியின்

# 'திராவிட' உணர்வு தேய்கிறது!

கடந்த வாரம் திராவிட இயக்கத்தின் பவள விழா மாநாடு மதுரையில் நடைபெற்றது திமுக தலைவர் மு கருணாநிதி உள்ளிட்ட பல திமுக மற்றும் திராவிடர் கழகத் தலைவர்களும் இதில் கோலாகலமாக கலந்து கொண்டனர்

திராவிட மொழிகளான கன்னடம், மலையாளம், தெலுங்கு மொழிகளுக்கு தமிழ் மொழியே ஆதார மொழி என மேலை நாட்டு அறிஞர்களே ஆராய்ச்சி செய்து அறிக்கை செய்ததும்,

மதம், பிரதேசம், கலை, பண்பாடு என்பனவற்றால் இந் நான்கு இனத்தவர்களுக்கிடையே உள்ள அதிகரித்த ஒற்றுமையும்,

எழுபத்தைந்து வருடங்களுக்கு முன்பே திராவிட இயக்கம் தோன்ற முக்கிய காரணிகளாயின,

### பாரதியின் திராவிட இணைப்பு

பாரத தேசியம் பாடிய மகாகவி பாரதி கூட:
"சேர நன்னாட்டிளம் பெண்களுடனே" என்றும்
"சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்து" என்றும்
"காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்வோம்" என்றும்
"நல்லியற் கன்னடத்துத் தங்கமளிப்போம்"

என்றும் திராவிடத்தை இணைத்துப்பாடினார் இந்த திராவிட உணர்வு பெரியார் ஈ வே இராமசாமி நாயக்கரின் திராவிடக் கழகத்தில் ஆரம்பித்து, அதிலிருந்து பிரிந்து திராவிட முன்னேற்றக்கழகம் உருவாகி, திமுகவிலிருந்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமெனவும் உருவானது.

### அண்ணா திராவிடக் கோரிக்கையைக் கைவிட்டார்

தமிழ் நாட்டில் 1967ம் ஆண்டு தேர்தலுக்கு முன்பாகவே பேரறிஞர் அண்ணா 'தேசிய ஒற்றுமை' கருதி திராவிடத் தனி நாட்டுக் கோரிக்கையை கைவிடுவதாக அறிவித்ததும் திராவிட இயக்கங்களுடன் பாரத தேசியம் நிரந்தரமாகவே புகுந்து கொண்டது.

இந்த திராவிட உணர்வின் இயக்கத்தின் சுவாரஸ்யமான அம்சம் என்னவென்றால் தமிழ் நாட்டில் மட்டுமே இந்த திராவிடர் பாரம்பரியம் அரசியல் ரீதியாகவும் சமூகரீதியாகவும் சிந்திக்கப்பட்டது தான்.

கன்னடத்திலோ, ஆந்திராவிலோ கேரளத்திலோ திராவிடம் குறிப்பிடத்தக்க அளவு கூட பேசப்படவில்லை இதற்கு மாறாக அங்கெல்லாம் தமிழர் எதிர்ப்பு உணர்வுகளே மேலோங்கி நின்றன.

இந்தப் பின்னணியிலேயே தற்போது தென்னிந்திய அரசியலைக் குறிப்பாகவும் இந்திய அரசியலைப் பொதுவாகவும் உலுக்கும் காவேரிஆற்று நீர் பகிர்வுப் பிணக்கை நோக்க வேண்டும்.

திராவிட இயக்கம் தமிழ் நாட்டில் ஆரம்பித்த அதேகாலப் பகுதியிலேயே தமிழகத்துக்கும் கர்நாடகத்துக்கும் இடையிலே இப்பிணக்கு தலைதூக்கியது அதன்பயனாகவே 1924ல் காவிரி நீர்ப் பகிர்வு சம்பந்தமான ஒப்பந்தம் உருவானது 1974ல் இவ்வொப்பந்தம் காலவதியானதும், அதைப் புதுப்பிப்பதை கர்நாடக அரசு தவிர்த்து பேச்சுவார்த்தை மூலம் தீர்வு என்று கூறியது.

இந்த நிலையைத் தமிழ் நாடு ஏற்கவில்லை நடுவர் மன்றத் தீர்வையே தமிழ் நாடு நியாயமானதெனக் கருதியது, வலியுறுத்தியது.

பிரம்மகிரி மலைகளில் உருவெடுத்து கர்நாடகம்

அளிப்பதை எவ்வாறு தடுப்பது என்பது குறித்து தாம் ஆராய்ந்து வருவதாக மலேஷிய டி ஐ பி தெரிவித்துள்ளார்.

### சிங்களக்...

அமைப்பை நெதிகில் ஓர் அரசியல் கட்சியாக மாற்ற பூர்வாங்க நடவடிக்கையில் அதன் தலைவர் ஆரியரட்ன ஈடுபட்டுள்ளதாககொழும்புச் செய்திகள் தெரிவித்தன

### இ. போ. ச.

அப்படி வழங்கப்படுமானால் நான் இங்கு சாகும் வரை உண்ணாவிரதம் இருப்பேன் என முழங்கினார்.

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட கண்டனத் தீர்மான அறிக்கையை நாளை கண்டி வரும் ஜனாதிபதி பிரேமதாஸவிடம் வழங்குவது எனவும் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் பௌத்த இயக்க பிரதிநிதிகள் அஸ்கிரிய பீடாதிபதியின் செயலாளர் ஆகியோரும் கலந்து கொண்டனர். (08)

அதிகமான சந்தேக நபர்களுக்கெதிராக போதிய சாட்சியங்கள் இல்லாமையால் சட்டமா அதிபர் வழக்குத் தாக்கல் செய்ய முடியாத நிலையில் இருக்கின்றார்,

இவர்கள் அனைவரும் விடுவிக்கப்படுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

### எதிர்க்...

ரூபவாஹினி ஒளிபரப்பிய விவரண நிகழ்ச்சியிலேயே இது ஒளிபரப்பாகியது.

சில நிமிட நேரம் நீடித்த இக்காட்சியில் அநுரா பண்டாரநாயக்க உட்பட பல எதிர்க்கட்சிகள் எழுந்துநின்று கூச்சலிடுவதும் ஜனாதிபதி தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பதும் ஒளிரப்பப்பட்டது,

### தமிழீழ...

புவோர் அன்றைய தினம் திருநெல்வேலியில் அமைந்துள்ள தமிழீழ மீட்பு நிதி தொடர்பகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி கேட்டுக்கொள்கிறார்கள்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி நூலகத்தை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளைக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் மேற்கொண்டு வருகின்றது

இந்நூலகத்திற்கென பழைய மாணவர் சங்கம் சுமார் 12,000 ரூபா பெறுமதியான நூல்களையும் கொள்வனவு செய்துள்ளது. (11)

## மாதிரி இல்லத் திறப்பு விழா

மாவீரர் துயிலும் மாதிரி இல்லத் திறப்பு விழாவும், மாவீரர்கள் ஞாபகார்த்தமாகக் கடற்புலிகளால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்ட, வலைப்பந்தாட்டப் பரிசளிப்பு விழாவும் ஜனவரித் திங்கள் 2 ஆம் நாள் பி.ப 5 மணியளவில் நடைபெறவுள்ளது. (16)

## காவல் நிலையங்கள் திறப்பு

தமிழீழ காவல்துறையின் மேலும் மூன்று காவல் நிலையங்கள் இன்று திறக்கப்படுகின்றன சங்கானை, கோப்பாய், சாவகச்சேரி ஆகிய பகுதிகளில் இவை திறந்து வைக்கப்படுகின்றன.

தெரியவருகிறது

நாளொன்றுக்கு 50,000 —— 1. 00000 யூதர்களை விமான மூலம் இஸ்ரேலுக்குக் கொண்டுவரலாமென இஸ்ரேலிய அதிகாரி கூறியதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பேச்சுப் போட்டியில் முதற் பரிசு

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பிறந்தநாள் அறக்கொடை நிதியம் நடாத்திய நாற்பத்தைந்து வயதிற்குட்பட்ட சைவசமய அறிஞர்களுக்கான சொற்பொழிவுப் போட்டியில் க.நாகேஸ்வரன், எம் ஏ.முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டார்.

இதற்கான பரிசளிப்பு வைபவ விழா 7-ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு துர்க்கையம்மன் தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் 'துர்க்கா துரந்தரி' செஞ்சொற் கொண்டல்' 'திருவாசகமணி' தங்கம்மா அப்பாக்குட்டி (ஜே பி) அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிலையைத் தமிழ் நாடு ஏற்க வில்லை நடுவர் மன்றத் தீர்வையே தமிழ் நாடு நியாயமானதெனக் கருதியது, வலியுறுத்தியது.

பிரம்மகிரி மலைகளில் உருவெடுத்து கர்நாடகம் தமிழ்நாடு பாண்டிச்சேரி ஊடாக 850 கிலோமீற்றர் தூரம் ஓடி வங்காள விரி குடாலில் காவேரி முடிவடைகிறது

தமது தேவைக்கு மேலதிகமான மழை நீர் வடிந்தோடும் வாய்க்காலாகவே காவேரியை கன்னடத்தார் பார்த்தனர்,

தமிழகமோ பன்னிரண்டு லட்சம் ஹெக்டெயர் நிலத்துக்கு நீர்ப்பாசனம் வழங்கும் நீரோட்டமாக காவேரியைப் பார்த்தது.

## நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவு

பிணக்குக்கு இணக்கம் காண முடியாததால பிரச்சினை நடுவர் மன்றத்தீர்வுக்கு பாரப்படுத்தப்பட்டது இந்திய உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவர் தலைமையிலான இந் நடுவர் மன்றம் கர்நாடகம் தமிழ் நாட்டுக்கு 205 டி எம சி தண்ணீர் வழங்க வேண்டுமென இடைக்கால உத்தரவை வழங்கியது.

இவ்வுத்தரவை கர்நாடகம் எதிர்த்தது

தென்னக நதிகளை இணைக்கும் தமிழகத்தின் திட்டத்தை ஆந்திர முதலவரும் எதிர்க்கிறார்,

தமிழ்நாடு அதை வர்த்தமானியில பிரசுரிக்க கோரியது.

இறுதியில மத்திய அரசு இவ்வுத்தரவைவர்த்தமானியில வெளியிட உத்தரவிட்டது.

இதைத் தொடர்ந்து 13-12-1991ம் கர்நாடக அரசும் அனைத்துக்கட்சிகளும் மாநிலம் தழுவிய ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்தன.

- வளரும்

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மிபில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 01· 01· 199[illegible]இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது